பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**19 04 2026** **6 45**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நவீனகால விருப்பங்களுடன் கலாச்சார பெருமையை, சமநிலையில் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

**2.** சுயநல அரசியலை கருத்தில் கொண்டே எதிர்க்கட்சிகள் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுக்கு எதிராக வாக்களித்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

**3.** சமூக நீதியை நிலைநாட்டும் ஆட்சி தொடர்வதற்கு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று திமுக கேட்டுக்கொண்டுள்ளது.

**4.** மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுக்கு எதிராக வாக்களித்ததன் மூலம் மகளிர் நலனுக்கு எதிர்க்கட்சிகள் முக்கியத்துவம் அளிக்கத் தவறிவிட்டதாக அஇஅதிமுக குறை கூறியுள்ளது.

**5.** ஃபிரான்சில் நடைபெற்ற சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் ரேவதி பட்டம் வென்றார்.

<<<<>>>>

நவீனகால விருப்பங்களுடன் கலாச்சார பெருமையை, சமநிலையில் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், குழந்தைகள் எதிர்காலத்தை தன்னம்பிக்கையுடனும், தெளிவான மனப்பாண்மையுடனும் எதிர்கொள்வதற்கு வழிகாட்டிகளாக சமூக அமைப்புகள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நாட்டின் வளமான எதிர்காலத்தை வழிநடத்துவதற்கான தலைமைப் பண்பு மற்றும் பொறுப்புணர்வு மிக்க குடிமக்களாக இளம் தலைமுறைகளை உருவாக்குவதில் அரசு பல்வேறு முன் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக குடியரசு துணைத்தலைவர் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் நலனுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் மசோதா மக்களவையில் நிறைவேறாதது குறித்து நேற்றிரவு நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றினார்.

இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கு அரசு தீவிர முயற்சி மேற்கொண்டபோதும் பலனளிக்கவில்லை என்று கூறினார்.

இதற்காக தாய்மார்கள் மற்றும் சகோதரிகளிடம் தான் மன்னிப்பு கோருவதாக பிரதமர் தெரிவித்தார்.

காங்கிரஸ், திரிணமுல் காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பெண்களின் நீண்டகால கனவை சிதைத்து விட்டதாக பிரதமர் குற்றம் சாட்டினார்.

மகளிருக்கு அதிகாரம் அளிப்பதில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு விருப்பமில்லை என்று அவர் தெரிவித்தார்.

சுயநல அரசியலை கருத்தில் கொண்டே எதிர்க்கட்சிகள் இந்த மசோதாவுக்கு எதிராக வாக்களித்ததாக அவர் குறிப்பிட்டார்.

மக்களவையில் இந்த மசோதாவுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்காத நிலையிலும், அனைத்து பெண்களும் அரசுக்கு ஆதரவாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேறாததை எதிர்கட்சிகள் கொண்டாடுவது தனக்கு மனவேதனை அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவுக்கு இன்னும் 4 நாட்களே எஞ்சியுள்ள நிலையில், அரசியல் கட்சிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன.

பிஜேபி, காங்கிரஸ், திமுக, அஇஅதிமுக, விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் பொதுக்கூட்டங்களில் பங்கேற்று தங்களது வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

கோவையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் மாற்றத்திற்கான தேர்தல் என்று குறிப்பிட்டார்.

துறையூரில் பிரச்சாரம் மேற்கொண்ட காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, அஇஅதிமுக மூலம் தமிழ்நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்த பிஜேபி முயற்சிப்பதாக குற்றம் சாட்டினார்.

கோவை மற்றும் நீலகிரியில் பிரச்சாரம் மேற்கொண்ட திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின், அனைத்து தரப்பு மக்களையும் ஒருங்கிணைத்து சமூக நீதியை நிலைநாட்டும் ஆட்சி தொடர்வதற்கு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கோபிசெட்டிபாளையத்தில் பிரச்சாரம் மேற்கொண்ட அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை நிறைவேறாமல் செய்ததன் மூலம் மகளிர் நலனுக்கு எதிர்க்கட்சிகள் முக்கியத்துவம் அளிக்கத் தவறிவிட்டதாக குற்றம் சாட்டினார்.

மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதற்காக நடத்தப்பட்ட தபால் வாக்குப்பதிவு பல்வேறு மாவட்டங்களில் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரை ஒரு லட்சத்து 41 ஆயிரம் பேர் வாக்களித்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து வாக்காளர்களிடையே பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தேர்தல் ஆணையம் நடத்தி வருகிறது.

ராதாகிருஷ்ணன் நகர், தண்டையார்பேட்டை, விருகம்பாக்கம், கோடம்பாக்கம், கோயம்பேடு, வேளச்சேரி போன்ற சட்டப்பேரவைத் தொகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்புகளில் வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட உள்ளதாக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<>>>

இனி தேர்தல் களம்...

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட 5 தொகுதிகள்.

(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 148 செகண்ட்ஸ்)

<<<<>>>>

**இருவரிச் செய்திகள்**

ஆஸ்திரேலியாவுக்கு 7 பில்லியன் டாலர் மதிப்பிலான போர்க் கப்பல்களை வழங்க வகை செய்யும் ஒப்பந்தத்தில் ஜப்பான்-ஆஸ்திரேலியா நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

------------

யுக்ரைனின் மீது ரஷ்யா நடத்திய வான் வழித் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். பலர் படுகாயம் அடைந்தனர்.

------------

லெபனானின் தென் பகுதியில் ஐ.நா. அமைதி தூதுவர்களை குறி வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் ஃபிரெஞ்ச் வீரர் கொல்லப்பட்தற்கு இந்தியாவும், பிரான்சும் கண்டனம் தெரிவித்துள்ளன.

------------

சத்தீஸ்கடில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 912 கிலோவுக்கும் கூடுதலான போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

------------

உத்தராகண்ட் மாநிலம் உத்தர்காசி மாவட்டத்தில் உள்ள கங்கோத்ரி, யமுனோத்ரி உள்ளிட்ட சார்தாம் யாத்திரை தொடங்குவதை குறிக்கும் வகையில் அதற்கான இணையதள முன்பதிவு இன்று தொடங்குகிறது.

------------

தருமபுரி மாவட்டத்தில் வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிக்க ஏதுவாக அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான திரு. சதிஷ் தெரிவித்துள்ளார்.

------------

வேலூர் மாவட்டம் காட்பாடியில் வாக்குச்சாவடி மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு நடைபெற்ற மறுபயிற்சி வகுப்பினை மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி சுப்புலட்சுமி ஆய்வு செய்தார்.

------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சமூக நலத்துறை சார்பில், 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, பல்வேறு பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு அழைப்பிதழ் வழங்கப்பட்டது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

**சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் ரேவதி பட்டம் வென்றார்.**

**பிரான்சில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 4-6, 7-5, 6-4 என்ற செட் கணக்கில், ஸ்பெயினின் Paola Pinera Celorio-ஐ வென்று இப்பட்டத்தை கைப்பற்றினார்.**

**<<<<The End>>>>**